1972 ஏப்ரல் 3]

ஆனால் இந்த ஏழு லட்சம் ரூபாய் என்பது தேர்விற்கான அட்மிஷன் பீஸ் என்ற முறையில் வந்ததுதான். ஆனால் தேர்விற்காகும் செலவு 11 லட்சத்திற்கு மேலாகிறது.

திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*843 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் காங்கயம் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963, 1966 ஆண்டுகளில் முனைப்புத் திட்டத்தின்கீழ் வாங்கியுள்ள கடன், உதவித் தொகை எவ்வளவு ?

(இ) மேற்படித் தொகையை என்ன என்ன காரணங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) 1963-ஆம் ஆண்டு கால்நடை முனைப்புத் திட்டத்தின் கீழ் திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு கடன், உதவித் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. 1966-ம் ஆண்டு இச்சங்கத்திற்கு ரூ. 1,90,000 கடனாகவும், ரூபாய் 30,000 உதவித் தொகையாகவும் கால்நடை முனைப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) தீவனத் தயாரிப்புத் தொழிற்சாலைக்கான நிலம், இயந்திரங்கள், லாரி வாங்குவதற்கும், தொழிற்சாலை, அலுவலகம், கிடங்கு ஆகியவற்றுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணியாளர்களை நியமிப்பதற்கும் மேற்படித் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியைக்கொண்டு சுழல் நிதி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் தயார் நிலையிலுள்ள கலவைத் தீவனத் தயாரிப்புக்கான தானிய வகையராக்கள் வாங்க வழி செய்யப்பட்டுள்ளது.

இது முறைப்படி தருகிற பதில். இதோடு சேர்த்து, இங்கு கால்நடை முனைப்புத் திட்டத்தின்கீழ் கடன் கொடுக்கப் பட்டுள்ளதா என்று வினா கேட்கப்பட்டிருக்கிற காரணத்தினால் 1963-ம் ஆண்டில் 'இல்லை' என்ற பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1963-ம் ஆண்டில் ஒரு கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : அப்படி வாங்கிய கடனை முறையாக செலவழித்திருக்கிறார்களா? அல்லது வாங்கிய கடன் முறைப் படியாகச் செலவழிக்கப்படாமல் பாங்கில் இருந்ததா? அந்தச் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் இல்லை. அவர்கள் செலவழிக்காத விவரமும் இல்லை, கடன் தொகையைத் திருப்பிக் கட்டிய விவரமும் இல்லை. உற்பத்தி, விற்பனை ஆகிய வற்றின் விவரங்கள் இருக்கின்றன. இதில் முறைகேடு உள்ளதா என்பது இங்கு தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தெரியவில்லை.

திரு. கோவை செழியன் : காங்கேயம் பொலிக் காளைகளை முன்பு அரசாங்கமே வாங்கி விவசாயிகளுக்கு இனாமாகத் தந்து இரண்டு ஆண்டுகள் அவை பொலிக் காளை வேலையைச் செய்தால் அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்து விடுவது என்றிருந்தது. அந்த முறை மறுபடியும் பின்பற்றப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி 1963, 1966 ஆண்டுகளில் முனைப்புத் திட்டத்தின்கீழ் திருப்பூர் காங்கயம் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்குக் கொடுத்த கடன், உதவி இவைபற்றியது. பொலிக் காளைகள் பற்றிய பொதுவான கேள்வி தனியாகக் கேட்கப்படவேண்டும்.

திரு. ஏ. எம். இராஜா : இந்தக் கால்நடை வளர்ச்சிக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ஏறக்குறைய 1966-ல் இரண்டு லட்சத்திற்கு அதிகம் கொடுத்திருக்கிறார்கள். 1963-ல் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணம் கடன் கொடுத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு பணம் இந்தக் கால்நடை வளர்ச்சிக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்குக் கொடுத்தும் எவ்வளவு கால்நடைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன, எவ்வளவு

1972 ஏப்ரல் 3]

கால்நடைகளை விற்றது என்ற கணக்குகளை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1962-ம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு 1963-ல் தரப்பட்ட கடன் தொகை ஏறத்தாழ ரூ. 59,700 ஆகும். அது உதவித் தொகையும், கடன் தொகையும். அந்தக் காலத்து ஆட்சி நம்மிடம் இல்லை என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். 1966-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடன் தொகையும் 1967-க்கு பின்னால் தரப்பட்டதல்ல. ஆனால் அப்படித் தரப்பட்ட கடன் தொகைகள் அந்தச் சங்கத்தினால் என்னென்ன காரியங்களுக்காகத் தரப்பட்டனவோ பெரும்பாலும் அதற்காகத் தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு, தீவன கலவைப் பிரிவு அமைக்க ஏற்பட்ட தொடக்கச் செலவு பற்றிய விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தச் சங்க நடவடிக்கைகளில் ஏதாவது குறை இருந்தால் அதைக் குறிப்பாக என் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : அரசாங்கத்திலிருந்து இவ்வளவு பெரிய தொகை கொடுத்தும்கூட நாள் ஒன்றுக்கு ஒரு டன் தீவனம்கூட அங்கு தயாரிப்பது கிடையாது. அங்கு தீவனம் கூடத் தயாரிக்கப்படாமல், அதுகூட இல்லாமல், லாரி எல்லாம் வாங்கி அரசாங்கப் பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அதையெல்லாம் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து ஆராயப்படும்.

மருத்துவ மனைகள்

*844 **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் வெளியுறை நோயாளிகள் பிரிவு துவக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.